# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

2016 டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி

**ஓய்வூதியச் சுற்றறிக்கை இலக்கம் : 12**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**<u>பல்கலைக்கழக ஓய்வூதிய நியதியத்தின் அங்கத்துவம்</u>**

பல்கலைக்கழக முறைமையில் பணியாற்றும் ஊழியர்களுக்கான ஓய்வூதிய நிதியம் சம்பந்தமாக 1999 ஜுன் மாதம் 10 ஆம் திகதிய 747 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

1999 ஜுன் மாதம் 10 ஆம் திகதிய 747 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்திக்கமைய ஓய்வுபெறும் வயது வரை இருபது வருடங்கள் அல்லது அதனிலும் அதிக காலம் சேவையாற்ற முடியுமான ஊழியர்கள் மாதாந்த ஓய்வூதியத்தைப் பெறுவதற்கான உரிமையைப் பெறுவதுடன், கட்டாய ஓய்வு பெறும் வயது வரை இருபது வருடங்கள் அல்லது அதனிலும் அதிக காலம் சேவையாற்ற முடியாத ஊழியர்கள் மாதாந்த ஓய்வூதியத்தைப் பெறுவதற்கான உரிமையைப் பெற மாட்டார்கள்.

அதற்கமைய, ஏற்கனவே ஓய்வூதிய நிதியத்தில் இணைந்துள்ள மற்றும் இருபது வருடங்கள் அல்லது அதனிலும் அதிக காலம் சேவையாற்ற முடியாத ஊழியர்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் செயலாளரிடம் முன்வைக்கப்படும் எழுத்து மூல கோரிக்கையின் அடிப்படையில் ஓய்வூதிய நிதியத்தில் காணப்படும் தமது சேமிப்பை பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கு மாற்றிக்கொள்வதற்கு இடமளிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு 2006 பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி நடைபெற்ற 704 ஆவது கூட்டத் தொடரின்போது தீர்மானித்துள்ளது.

மேற் குறிப்பிடப்பட்ட தீர்மானத்துடன் தொடர்புடைய வகையில் 2016 டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் கீழ் குறிப்பிடப்படும் விடயங்களை உயர் கல்வி நிறுவகங்கள் அமுல்படுத்துமாறு அவற்றுக்கு அறிவித்தல் விடுப்பதற்கு 2016 டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி நடைபெற்ற 955 ஆவது கூட்டத் தொடரின்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

(அ) முதல் நிரந்தர நியமனத் திகதி முதல் கட்டாய ஓய்வு பெறும் வயது வரை (கல்விசார் - 65 வயது ; கல்விசாரா - 60 வயது) பல்கலைக்கழக முறைமையில் இருபது வருடங்கள் அல்லது அதனிலும் அதிக காலம் சேவையாற்ற முடியாத ஓய்வூதிய நிதியத்தின் அங்கத்தவர்கள் அவர்களது வேண்டுகோளின் அடிப்படையில் பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தில் காணப்படும் தமது சேமிப்பை பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கு மாற்றிக்கொள்வதற்கான உரிமையைப் பெறுவார்கள். அதற்கமைய, பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கு சேமிப்பை மாற்றிக்கொள்வதற்கு விரும்பும் அங்கத்தவர்கள் இந்தச் சுற்றறிக்கையின் இணைப்பு - I இல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்திற்கமைய பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் செயலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) முதல் நியமனத் திகதி முதல் கட்டாய ஓய்வு பெறும் வயது வரை (கல்விசார் - 65 வயது ; கல்விசாரா - 60 வயது) பல்கலைக்கழக முறைமையில் இருபது வருடங்கள் அல்லது அதனிலும் அதிக காலம் சேவையாற்ற முடியாத புதிதாக ஆட்சேர்த்துக் கொள்ளப்படும் ஊழியர்களுக்கு அவர்களது நியமனக் கடிதத்தில் பல்கலைக்கழக சேமலாப நிதியம் /

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம் தொடர்பாக தற்போது அமுலில் இருக்கும் உறுப்புரைகளுக்கு மேலதிகமாக கீழ் குறிப்பிடப்படும் உறுப்புரையை உள்ளடக்குவதன் ஊடாக இது சம்பந்தமாக அவர்களை அறிவுறுத்தல் வேண்டும்.

**புதிய உறுப்புரை**

"முதல் நியமனத் திகதி முதல் கட்டாய ஓய்வு பெறும் வயது வரை (கல்விசார் - 65 வயது ; கல்விசாரா - 60 வயது) பல்கலைக்கழக முறைமையில் இருபது வருடங்கள் அல்லது அதனிலும் அதிக காலம் சேவையாற்ற முடியாத ஊழியர்கள் பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பைச் செலுத்தக் கூடாது. அவ்வாறான ஊழியர்கள் பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் அங்கத்தவர்களாக மாட்டார்கள்."

(இ) பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் அங்கத்தவராக இருப்பதுடன், பதவியை இராஜினாமா செய்தல் / சேவை முடிவுறுத்தப்படல் / பதவியை விட்டுச் செல்லல் / மரணித்தல் / சம்பளமற்ற விடுமுறை அல்லது குறைந்தளவு சேவைக் காலத்தின் மீது தாக்கம் செலுத்தும் வேறு எந்தவொரு காரணத்தினாலும் பல்கலைக்கழக முறைமையில் இருபது வருடங்கள் அல்லது அதனிலும் அதிக காலம் சேவையாற்ற முடியாத ஊழியர்கள் மாதாந்த ஓய்வூதியத்தைப் பெறுவதற்கான உரிமையைப் பெற மாட்டார்கள். ஓய்வூதிய நிதியத்தில் அவர்களுக்குரிய சேமிப்பு 1999 ஜூன் மாதம் 10 ஆம் திகதிய 747 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையின் பிரகாரம் அவர்களுக்குச் மீளச் செலுத்தப்படும்.

இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 2016 டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும்.

தயவு செய்து இதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை குறிப்பிட்ட சம்பந்தப்பட்ட ஊழியர்களின் கவனத்திற்கு உட்படுத்தி இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

**ஒப்பம் : பேராசிரியர் மொஹான் த சில்வா**
தலைவர்

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
6. பீடாதிபதிகள்.
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
8. கணக்காளர், பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு.
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars).
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் / சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள் / உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்.
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் / சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள் / உதவிநிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. தொழிற்சங்களின் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.